# உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன். எரே 1 : 8

**நீ அவர்களுக்கு பயப்பட வேண்டாம், உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்**

எனக்கு அன்பான சகோதர, சகோதரிகளே

கர்த்தர் எரேமியாவை நோக்கி நீ சிறு பிள்ளையென்று சொல்லாதே, நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ போய் நான் எனக்கு கட்டளையிடுகிறவைகளையெல்லாம் நீ பேசுவாயாக. "நீ அவர்களுக்கு பயப்பட வேண்டாம், உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்'' என்றார். யாருக்கு முன்பாக பயப்பட வேண்டாம் என்றார். இதோ தேசமனைத்துக்கும், யூதாவின் ராஜாக்களுக்கும், அதின் பிரபுகளுக்கும், அதின் ஆசாரியர்களுக்கும் தேசத்தின் ஜனங்களுக்கும் எதிராக நான் உன்னை இன்றைய தினம் அரணிப்பான பட்டணமும், இரும்புத்தூணும், வெண்கல அலங்கமும் ஆக்கினேன்.

**எரேமியா 1 : 18,19.**

அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம் பண்ணுவார்கள். ஆனாலும் உன்னை மேற்கொள்ளமாட்டார். உன்னை இரட்சிக்கும்படிக்கு, நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொன்னார்.

ஆம், தேவனுடைய பிள்ளைகளே,

உனக்கு விரோதமாய் யுத்தம் பண்ணுகிறவர்கள் உண்டு. "நீ அவர்களுக்கு பயப்பட வேண்டாம், **உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்**'' என்ற வார்த்தையை விசுவாசத்துடன் சொல்லிக் கொண்டே கடந்து செல்லுங்கள். தேவனுடைய ஊழியக்காரரே, கர்த்தரின் வார்த்தையை சொல்லிப் பாருங்கள். எரேமியாவோடு இருந்தவர் என்னோடும் இருப்பார்.

கர்த்தருடைய தாசனாகிய மோசே மரித்த பின்பு யோசுவாவை நோக்கி "நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை''. நான் மோசேயோடே இருந்தது போல உன்னோடும் இருப்பேன். என்றாரே **யோசுவா 1 : 5.**

பலங்கொண்டு திடமனதாயிரு, உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்கு கொடுத்தேன். இந்த ஜனத்தின் பிதாக்களுக்கு நான் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்தை நீ இவர்களுக்கு பங்கிடுவாய் என்றார். தேவன் உன்னைக் கொண்டும் பெரிய காரியங்களைச் செய்யப் போகிறார். இல்லாதவைகளை இருக்கிறதாக அழைக்கிறவர் உன்னோடிருக்கிறார் என்பதை மறவாதே.

**ஆனால் யோசுவாவுக்கு சொன்ன எச்சரிப்பு என்ன தெரியுமா?** என் தாசனாகிய மோசே உனக்கு கற்பித்த நியாயப் பிரமாணத்தின்படியெல்லாம் செய்ய கவனமாயிருக்க மாத்திரம். மிகவும் பலங்கொண்டு திடமனதாயிரு. போகும் இடமெல்லாம் புத்திமானாய் நடந்துகொள்ளும்படிக்கு வலது, இடதுபுறம் விலகாதிருப்பாயாக. நியாயப் பிரமாணம் உன் வாயை விட்டு பிரியாதிருப்பதாக. இரவும், பகலும் அதைத் தியானித்து கொண்டிருப்பாயாக. அப்பொழுது நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருப்பார். **( யோசுவா 1 : 7–9)**

நாமும் இவைகளின்படி கவனமாயிருந்தால் நம்மோடு இருக்கிறவராகவே இருப்பார்.

**ஏசாயாவோடு தேவன் பேசுகிறார். (ஏசாயா 41 : 10 – 12).**

நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன். திகையாதே, நான் உன் தேவன். இதோ உன் மேல் எரிச்சலாயிருக்கிற யாவரும் வெட்கி இலச்சையடைவார்கள். உன்னோடே வழக்காடுகிறவர்கள் நாசமாகி ஒன்றுமில்லாமல் போவார்கள். உன்னோடே போராடினவர்களை தேடியும் காணாதிருப்பாய். உன்னோடே யுத்தம் பண்ணின மனுஷர் ஒன்று மில்லாமல் இல்பொருளாவார்கள் என்று ஏசாயாவுக்கு கொடுத்த வாக்கு உனக்கும் தானே. வாக்குப் பண்ணினவர் உண்மையுள்ளவர். அவர் அப்படியே செய்வார்

நமது தேசத்தில் சம்பவிக்கும் காரியங்களையெல்லாம் பார்க்கும்போது உபத்திரவ காலத்தின் சூழ்நிலைகள். இனி எப்படி என்ன நடக்குமோ என்று திகைப்புடன் இருக்கும் தேவ பிள்ளைகளோடு தேவன் இருக்கிறார்.

**இயேசு சொன்னார் – யோவான்16 : 33**

உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன்கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன்

உபத்திரவத்தின் நடுவிலும் தீயையும், தண்ணீரையும் கடக்கும் போது உன்னோடு இருப்பார். உன் சரீரம் அழிந்தாலும் உன் ஆத்துமாவை காப்பார். இயேசுவுக்காக உண்மையாயிரு.

தேவ ஊழியக்காரரே!

நாம் பயப்படாமல் சுவிசேஷத்திற்கு வாசல்கள் அடைபடுமுன் தேவசித்தத்தை நிறைவேற்றுவோம். கர்த்தருடைய பிள்ளைகளே நாம் ஏகோபித்து கர்த்தருடைய பணியை எழும்பி கட்ட வேண்டிய நாட்களில் கர்த்தருக்கென்று, முழுமனதுடன் உண்மையாயிருந்து செய்து முடிப்போம்.

**பக்தன் பாடுகிறார்.**

கொஞ்சகாலம் இயேசுவுக்காக
கஷ்டப்பாடு சகிப்பதினால்
இன்னல் துன்பம் இன்பமாய் மாறும்
இயேசுவை நாம் காணும்போது
அவர் பாதம் வீழ்ந்து பணிந்தே ஆனந்த கண்ணீர் வடிப்பேன்
எந்தன் ஓட்டம் ஜெயத்துடன் முடியும் அந்த நாடு சுதந்தரிப்பேன்

என்று பக்தன் பாடியது போல நம் ஓட்டத்தை ஜெயத்துடன் முடிப்போம். அல்லேலூயா.

**நீ அவர்களுக்கு பயப்பட வேண்டாம் உன்னை காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்**